## THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

## MCOP.No. 106/ 2017

Deposition of RW4 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OS Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 22.03.2024

Evidence Recorded Time: 12.35 P.M to 12.40 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | ரா. வித்யா | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | பிரபாகரன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை:–**

நான் இதில் 3ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி.4 ஆவேன். நான் பவானி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தட்டச்சராக பணியாற்றி வருகிறேன். என்னை சாட்சி சொல்ல ஆர்டிஓ அவர்கள் அனுமதி கடிதம் கொடுத்து அனுப்பியுள்ளார். அதை இத்துடன் தாக்கல் செய்கிறேன். நான் நீதிமன்றம் கோரியுள்ள ஆவணங்கள் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். விபத்தில் சம்மந்தப்பட்ட டிஎன் 27 Z 7787 என்ற லாரி மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை மற்றும் டிஎன் 52 யு 7797 என்ற Honda Amaze காரின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். மேற்படி அறிக்கையின் படி இரண்டு வாகனங்களும் அடிபட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அது சாட்சி சான்றாவணம் 6 முதல் 7 ஆகும்.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –

விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆவணங்கள் மூலமாகத்தான் தெரியும். இரண்டு வண்டிகளுக்கும் விபத்து ஏற்பட்டது என்றும் எந்த வண்டிக்கு அதிக சேதாரம் ஏற்பட்டது என்றால் காருக்குதான் சேதாரம் எற்பட்டது. விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும் கார் ஓட்டுநர் காரணமா அல்லது லாரி ஒட்டுநர் காரணமா என்று என்னால் சரியாக சொல்ல முடியாது என்று சொன்னால் சரிதான். கார் ஓட்டுநர் தான் விபத்திற்கு காரணம் என்ற சொன்னால் சரியல்ல.

ஒம்/–RW4

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டூர்.